


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ அக்டோபர். 22, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 20 ❖ ரூ.10




## தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு உதவி ஆணையர் உட்பட 4 போலீசார்

# சஸ்பெண்டு

## நீதிபதி அருணா ஜெகதீசன் அறிக்கை செவ்வாய்க்கிழமை சட்டமன்ற கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் 4பேரை பணியிடை நீக்கம் செய்து டிஜிபி சைலேந்திர பாபு உத்தரவு



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருமயம் சட்டமன்றத் தொகுதியில் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாத அவசியத் தேவைகளை நிறைவேற்றுவது குறித்த ஆலோசனைக் கூட்டம், புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ் ரகுபதி முன்னிலையில் நேற்று நடைபெற்றது, கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கருப்பசாமி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ராஜேந்திர பிரசாத் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

**சென்னை, அக். 22-**

**தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக திருநெல்வேலியில் பணிபுரியும் உதவி ஆணையர் உட்பட 4 போலீசார் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.**



தூத்துக்குடியில் கடந்த 2018 ஆம் ஆண்டு ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான மக்களின் போராட்டத்தின்போது, போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 13 பேர் உயிரிழந்தனர். இந்த வழக்கை விசாரிக்க ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. இதன் அறிக்கையை நீதிபதி அருணா ஜெகதீசன் கடந்த மே மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கினார்.

இந்த அறிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டது. தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவத்தின் போது, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துப்பாக்கிச் சூடு நடத்த போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்த திருமலை உத்தரவிட்டார். அதில் கந்தையா மற்றும் தமிழரசன் ஆகியோர் உயிரிழந்துள்ளனர் என அருணா ஜெகதீசன் ஒரு நபர் ஆணைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக டிஜிபி உத்தரவுப்படி, அப்போதைய புதுக்கோட்டை காவல் ஆய்வாளரும்,தற்போதைய நெல்லை சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு உதவி ஆணையராகவும் உள்ள திருமலை பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில், காவலர் சுடலைக்கண்ணு தனி ஆளாக அபாயகரமான துப்பாக்கியைக் கொண்டு மொத்தம் 17 ரவுண்டு துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளதாக கூறப்பட்டுள்ளது. சுடலைக்கண்ணு கிரேடு 1 காவலராக நெல்லை மாவட்டம் திசையன்விளை காவல் நிலையத்தில் பணியாற்றி வருகிறார். இவர் மறைந்திருந்து துப்பாக்கியால் சுட்டு பலர் உயிரிழக்க காரணமாக இருந்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வரும் சங்கர், அப்போதைய டிஐஜி கபில்குமார் சாராட்கரரின் பாதுகாப்பு அதிகாரியாக பணிபுரிந்து வந்துள்ளார்.


இவரும் துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் பலர் உயிரிழக்க காரணமாக இருந்ததாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது இவர் தென்காசி மாவட்டம் அச்சன்புதூர் காவல் நிலையத்தில் பணி செய்து வருகிறார். நீதிபதி அருணா ஜெகதீசன் அறிக்கையின்படி, தூத்துக்குடி துப்பாகிச்சூடு சம்பவத்தில் பலரது உயிரிழப்பிற்கு காரணமாக இருந்த நெல்லை சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு உதவி ஆணையராகவும் உள்ள திருமலை, காவலர்கள் சுடலைக்கண்ணு, சங்கர் மற்றும் சதீஷ் ஆகிய நான்கு பேரையும் பணியிடை நீக்கம் செய்து டிஜிபி சைலேந்திர பாபு நேற்று உத்தரவிட்டார்.



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்






தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,665 | Rs.5,067 |

### அன்னவாசல் அருகே வீட்டிற்குள் புகுந்த

# இரண்டு விஷ பாம்புகளை தீயணைப்பு துறையினர் பிடித்து வனப்பகுதியில் விட்டனர்



அன்னவாசல் , அக்.22-

அன்னவாசல் அருகே உள்ள கடம்பராயன்பட்டியை சேர்ந்தவர் பழனிச்சாமி இவரது வீட்டில் உள்ள சமையல் அறையில் விஷ பாம்பு புகுந்து கொண்டு அச்சுருத்துவதாக பழனிச்சாமி இலுப்பூர் தீயணைப்பு அலுவலகத்திற்கு தகவல் அளித்தார்.

பின்னர் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த இலுப்பூர் தீயணைப்பு நிலைய அலுவலர் முருகேசன் தலைமையிலான தீயணைப்புதுறையினர் சிறிது நேர போராட்டத்திற்கு பின்பு விஷ பாம்பை உயிருடன் பிடித்தனர். இதேபோன்று இலுப்பூர் அருகே உள்ள ஆலத்தூரை சேர்ந்த மாலா என்பவரது குடியிருப்பு வீட்டில் விஷ பாம்பு ஒன்று இருப்பதாக இலுப்பூர் தீயணைப்பு நிலைய அலுவலகத்திற்கு தகவல் அளித்தனர் பின்னர் அங்கு சென்ற தீயணைப்புதுறையினர் அங்கிருந்த விஷ பாம்பை பிடித்னர்.

பின்னர் பிடிபட்ட இரண்டு விஷ பாம்புகளையும் தீயணைப்புதுறையினர் சாக்கு பையில் அடைத்து வனப்பகுதியில் கொண்டுவிட்டனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

### காஷ்மீர், வடகிழக்கு பகுதிகளில்

# கடந்த 8 ஆண்டுகளில் பாதுகாப்பு நிலைமை மேம்பட்டுள்ளது: உள்துறை மந்திரி அமித்ஷா



புதுடெல்லி, அக்.22-

டெல்லியில் உள்ள தேசிய காவல்துறை நினைவிடத்தில் மத்திய உள்துறை மந்திரி அமித் ஷா மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

லடாக்கின் ஹாட் ஸ்பிரிங் பகுதியில் 1959ஆம் ஆண்டு இதே நாளில் சீனப் படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட 10 மத்திய ரிசர்வ் போலீஸ் படை(சிஆர்பிஎப்) வீரர்கள் நினைவாக, ஆண்டுதோறும் அக்டோபர் 21ம் தேதி, தேசிய காவல்துறை நினைவேந்தல் தினம் அனுசரிக்கப்படுகிறது. இதனையொட்டி, டெல்லியில் உள்ள தேசிய காவல்துறை நினைவிடத்தில் மத்திய உள்துறை மந்திரி அமித் ஷா மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

அப்போது மத்திய உள்துறை மந்திரி அமித் ஷா பேசுகையில்: நாடு முழுவதும் காவல்துறை மற்றும் துணை ராணுவப் படையினரின் தியாகத்தால் இந்தியா வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருகிறது. கொரோனா பெருந்தொற்றின் போது நாடு முழுவதும் உள்ள காவல்துறை மற்றும் துணை ராணுவப் பணியாளர்கள் முக்கியப் பங்காற்றினர். வடகிழக்கு மாநிலங்களில் ஆயுதப்படைகளுக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு அதிகாரங்களை நீக்கியுள்ளோம்.

அதற்கு பதிலாக, அங்குள்ள இளைஞர்களுக்கு சிறப்பு அதிகாரங்களை வழங்கியுள்ளோம். இதனால் இந்த பகுதிகளில் 70 சதவீதத்திற்கும் அதிகமான வன்முறை குறைந்துள்ளது. ஜம்மு-காஷ்மீரில், முன்பு பாதுகாப்புப் பணியாளர்கள் மீது கற்களை வீசியவர்கள் இப்போது பஞ்சாயத்து தலைவர்களாக ஆகிவிட்டனர். நக்சல் வன்முறையால் பாதிக்கப்பட்ட மாநிலங்களின் ஏகலவ்யா பள்ளிகளில் தேசிய கீதம் பாடப்படுகிறது, இந்த கட்டிடங்களில் தேசிய கொடி பறக்கிறது. வடகிழக்கு மற்றும் ஜம்மு-காஷ்மீர் மற்றும் நக்சல் வன்முறையால் பாதிக்கப்பட்ட மாநிலங்களின் கிளர்ச்சி பாதித்த பகுதிகளின் பாதுகாப்புநிலைமை நரேந்திர மோடி அரசாங்கத்தின் கடந்த 8 ஆண்டுகளில் மேம்பட்டுள்ளது. என்றார்.

# ஆதிகுரு சங்கராச்சாரியா நினைவிடத்தில் பிரதமர் மோடி வழிபாடு



கேதார்நாத், அக்.22-

உத்தரகாண்ட் சென்ற பிரதமர் மோடி ஆதிகுரு சங்கராச்சாரியா நினைவிடத்தில் வழிபாடு செய்தார். உத்தரகாண்ட் மாநிலம் கேதார்நாத்தில் கடந்த 2013-ம் ஆண்டு வெள்ளத்தில் ஆதிகுரு சங்கராச்சாரியா நினைவிடம் சேதமடைந்தது.

பின்னர், மறுசீரமைக்கப்பட்ட நினைவிடத்தை கடந்த ஆண்டு பிரதமர் மோடி திறந்து வைத்தார். தற்போது உத்தரகாண்ட் மாநிலத்திற்கு சென்றுள்ள பிரதமர் மோடி ரூ. 3 ஆயிரத்து 400 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்த நிலையில் நேற்று காலை கேதார்நாத் கோயிலில் வழிபட்ட பிரதமர் மோடி ஆதிகுரு சங்கராச்சாரியா நினைவிடத்திற்கு சென்றார். அங்கு மறுசீரமைக்கப்பட்ட நினைவிடத்தை பார்வையிட்டு வழிபாடும் செய்தார்.

தேவி கன்ஸ்ட்ரக்ஸன்
ENGINEERS - BUILDERS - VALUERS & PROMOTORS
West Main Street, (Opp : BSNL Office), PUDUKKOTTAI.
Cell : 94 43 12 04 67, 90 80 90 20 03
(04322) 220467
Er. N.KANAGARAJAN, B.E.,M.I.E.,F.I.V.,PGDQSV.,M.Sc.(val)
Approved Valuer, Charted Engineer & Government Approved Panel Engineer

# அன்னவாசல் அருகே வயலோகத்தில் ஆக்கிரமிப்பு அகற்றம்



அன்னவாசல் ,அக்.22-

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் தாலுகா, குடுமியான்மலை சரகம், வயலோகம் வட்டம், வயலோகம் பெரிய குளம் பகுதிகளில் உள்ள திட்டப்பரப்பு பகுதியில் வரத்து வாரிகளை சிலர் ஆக்கிராமிப்பு செய்துள்ளதாக கிடைத்த தகவலையடுத்து இலுப்பூர் வருவாய் துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தியதில் உண்மை கண்டறியப் பட்டதையடுத்து தாசில்தார் வெள்ளைச்சாமி, தலைமையில் மண்டல துணை தாசில்தார் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர், பொதுபனித்துறையினர் முன்னிலையில் ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்பட்டது.

# பிளாஸ்மாவுக்கு பதில் நரம்பு வழியே சாத்துக்குடி ஜூஸ் நோயாளி பரிதாப பலி




லக்னோ, அக்.22-

உத்தரபிரதேச மாநிலத்தில் ரத்த பிளாஸ்மாவுக்கு பதில் சாத்துக்குடி பழச்சாறை டிரிப்ஸ் மூலம் கொடுத்த சம்பவத்தில் டெங்கு நோயாளி உயிரிழந்தார். உத்தரபிரதேசத்தின் பிரயாக்ராஜ்மாவட்டத்தை சேர்ந்த பிரதீப் பாண்டே என்ற நபர் டெங்கு பாதிப்பால் அப்பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். உடல்நிலை மிகவும் மோசமாக இருந்த நிலையில் அவருக்குஇரத்த அணுக்களை அதிகரிக்க 'டிரிப்ஸ்' மூலம் ரத்த பிளாஸ்மா ஏற்றப்பட்டது. 3 ரத்த பிளாஸ்மா ஏற்றப்பட்ட நிலையில் உடல்நிலை மிகவும் மோசமடைந்த நோயாளி பிரதீப் பாண்டே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்நிலையில், நோயாளிக்கு 'டிரிப்ஸ்' மூலம் ஏற்றப்பட்டது ரத்த பிளாஸ்மா அல்ல என்பதும் அது சாத்துக்குடி பழச்சாறு என்பதும் தெரியவந்துள்ளது. பிளாஸ்மாவுக்கு பதில் சாத்துக்குடி பழச்சாறு பாக்கெட்டில் அடைக்கப்பட்டுள்ளது. அதை 'டிரிப்ஸ்' மூலம் நோயாளிக்குநரம்புவழியே ஏற்றியுள்ளனர். இதில், உடல்நிலைமோசமடைந்த நோயாளி பிரதீப் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில்மருத்துவமனைக்கு அதிகாரிகள் சீல் வைத்துள்ளனர். நோயாளிக்கு பிளாஸ்மாவுக்கு பதில் சாத்துக்குடி ஜூஸ் ஏற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக அந்த மருத்துவமனை நிர்வாகி கூறுகையில்:

நோயாளியின் உடலில் ரத்த அணுக்களின் அளவு 17 ஆயிரமாக குறைந்தது. இதனால், ரத்த பிளாஸ்மாக்களை ஏற்பாடு செய்யுமாறு நோயாளியின் உறவினர்களிடம் கூறினோம். அவர்கள் எஸ் ஆர் என் மருத்துவமனையில் இருந்து 5 யூனிட் ரத்த பிளாஸ்மாவை கொண்டு வந்தனர். அதில், 3-ஐ நோயாளியின் உடலில் ஏற்றினோம். அப்போது, அவரது உடல்நிலை மோசமடைந்தது.இதனால், பிளாஸ்மாவை செலுத்தும் பணியை உடனடியாக நிறுத்திவிட்டோம்' என்றார். பிளாஸ்மாவுக்கு பதில் சாத்துக்குடி ஜூஸ் செலுத்தியதில் நோயாளி உயிரிழந்த சம்பவம் தொடர்பாக விசாரணையை தீவிரப்படுத்தியுள்ள அதிகாரிகள் மருத்துவமனைக்கு சீல் வைத்ததுடன் அங்குள்ள மருந்துகள், பிளாஸ்மா உள்ளிட்டவற்றை சோதனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். மேலும், இந்தசம்பவம்தொடர்பாக விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பிளாஸ்மாவுக்கு பதில் சாத்துக்குடி பழச்சாறு செலுத்தியதில் நோயாளி உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

Marlin Marbles
• Cements • Steels • Marbles • Granites • Tiles
99526 52396 / 94431 66264
Alangudi Main Road, Pudukkottai - 622 001.
E-mail : marlingranite12@gmail.com

### கறம்பக்குடி வாலிபர் சிங்கப்பூரில் மரணம்

# உடலை கொண்டுவர உறவினர்கள் கோரிக்கை



கறம்பக்குடி, அக். 22-

சிங்கப்பூரில் வேலை பார்த்த கறம்பக்குடி வாலிபர் உயிரிழந்துள்ளார், அவரது உடலை சொந்த ஊர் கொண்டு வர உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி சடையன் தெருவை சேர்ந்தவர் செல்வராஜ் மகன் புஷ்பராஜ் (வயது35), இவருக்கு திருமணமாகி6ஆண்டுகள் ஆகிறது, மனைவி மற்றும் 2 குழந்தைகள் உள்ளனர், இவர் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு சிங்கப்பூரில் சென்று அங்கு உள்ள தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார், இரண்டு நாட்களுக்கு முன் குடும்பத்தினரிடம் செல்போனில் பேசியுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை புஷ்பராஜ் சிங்கப்பூரில் இருந்த அறையில் இறந்து கிடப்பதாக குடும்பத்தினருக்கு புஷ்பராஜ் நண்பர்கள் தகவல் கொடுத்தனர், இதை கேட்டு அவரது மனைவி மற்றும் குடும்பத்தினர் கதறி அழுதனர், குடும்ப சூழ்நிலை காரணமாக வெளிநாடு சென்ற வாலிபர் இறந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது, புஷ்பராஜன் உடலை சிங்கப்பூரில் இருந்து சொந்த ஊரான கறம்பக்குடி கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் , மிகுந்த ஏழ்மையான சூழலில் உள்ள புஷ்பராஜ் குடும்பத்திற்கு அரசு உதவ வேண்டுமென அவரது உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா பள்ளியில் மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கான தியானப் பயிற்சி



புதுக்கோட்டை, அக்.22-

ஹார்ட் ஃபுல்னெஸ் இன்ஸ்டியூட்டின் நிறுவனமும் ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளியும் இணைந்து நடத்திய மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கான ஒருவாரதியான பயிற்சி திருக்கோகர்ணம் ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிக்மேல் நிலைப்பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது. இதில் மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் கலந்துகொண்டு தியானத்தின் பயன் மற்றும் தியானத்தின் அவசியம் ஆகியவற்றை தெரிந்து கொண்டனர்.

இந்த பயனுள்ள வாய்ப்பைஏற்படுத்தித்தந்த பள்ளி நிர்வாகத்திற்கும், முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி மற்றும் துணை முதல்வர் குமாரவேல் ஆகியோர்களுக்கும்ஹார்ட் ஃபுல்னெஸ்அமைப்பிற்கும் மாணவர்கள் தங்கள் நன்றிகளைத் தெரியப்படுத்தினர்.

# புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தீபாவளி கொண்டாட்டம்



புதுக்கோட்டை, அக்.22-

புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நேற்று தீபாவளியை முன்னிட்டு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் வைரமித்ரா என்னும் நிகழ்ச்சியில் மாணவர்கள் ஆடல் பாடல் மற்றும் விழிப்புணர்வு நாடகம் ஆகிய போட்டிகளில் மதிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர்.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பள்ளி நிர்வாகத்தினர் பாராட்டுகளைத் தெரிவித்தனர், பள்ளியன் தலைவர் தேனாள் சுப்ரமணியன், பள்ளியின் முதல்வர் சிராஜுதின், பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் அஸ்வினி நாச்சம்மை, துணை முதல்வர் சுப்ரமணியன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டணர்.

# தென்காசி மாவட்டம் சுரண்டையில் பாஜக சார்பில் பல்வேறு கோரிக்கைகளை நிறைவெற்ற கோரி கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி, அக்.22-

தென்காசி மாவட்டம் சுரண்டை நகர பாரதிய ஜனதா கட்சி சார்பில் சுரண்டை நகராட்சிக்கு நிரந்தர ஆணையாளரை நியமிக்க கோரியும், காமராஜர் கலைக் கல்லூரியின் பெயரை கலைஞர் நகர் என மாற்றியதை கண்டித்தும், நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் புதிதாக வீடு கட்ட வரைபட அனுமதி,குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பிப்பவர்களுக்கு உடனடியாக வழங்கவும், செண்பக கால்வாயில் செல்லும் கழிவுநீரை தனி கால்வாய் ஏற்படுத்தி சுத்திகரிப்பு செய்யவும், டெங்கு, சிக்கன் குனியா போன்ற நோய்கள் பரவுவதை தடுக்க முன்னெச்சரிக்கை எடுக்காததையும், கீழச்சுரண்டை பட்டாளத்தில் மற்றும் பங்களா சுரண்டை மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி மந்த நிலையில் வேலை நடைபெறாமல் இருப்பதையும், சுரண்டை நகராட்சி சார்பாக காமராஜர் வணிகவளம் உள்ள நகராட்சி இடத்தில் பூங்கா அமைக்க வேண்டியும், சுரண்டை நகராட்சி பகுதியில் சுமார் ஒரு லட்சம் மக்கள் வசிப்பதால் நவீன வசதியுடன் 24 மணி நேரம் இயங்கக்கூடிய அரசு மருத்துவமனை அமைக்க கோரியும், சுரண்டை நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் மின் மயானம் அமைக்க வலியுறுத்தியும், கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு சுரண்டை நகரத் தலைவர் அருணாச்சலம் தலைமை வகித்தார், மாநில வர்த்தக பிரிவு தலைவர் மற்றும் தென்காசி மாவட்ட பார்வையாளருமான ராஜா கண்ணன் ஆகியோர் முன்னிலைவகித்தனர்,

பாரதிய ஜனதா கட்சியின் தென்காசி மாவட்டத் தலைவர் ராஜேஷ் ராஜா, மாவட்ட பொதுச் செயலாளர்கள் பாலகுருநாதன், அருள்செல்வன் மாவட்ட பொருளாளர் பாலகிருஷ்ணன், மாநில செயற்குழு உறுப்பினர் அன்புராஜ், கட்டளை ஜோதி, வர்த்தக பிரிவு மாநில செயலாளர் கோதை மாரியப்பன், மற்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள். மாவட்டத் துணைத் தலைவர்கள் முத்துக்குமார், பாலமுருகன், முன்னாள் மாவட்டத் தலைவர் பாண்டித்துரை, சுரண்டை நகர பாரதிய ஜனதா கட்சி பார்வையாளர் முருகேசன், சுரண்டை நகர பொதுச்செயலாளர்கள் செந்தில்குமார், லிங்கம், பிரச்சார பிரிவு மாவட்டத் தலைவர் சங்கரநாராயணன், கலை மற்றும் கலாச்சார பிரிவு மாவட்டத் தலைவர் பவுன்ராஜ், ஊடகப்பிரிவு மாவட்டத் தலைவர் செந்தூர்பாண்டியன், அரசு தொடர்பு பிரிவு மாவட்ட தலைவர் குத்தா லிங்கம் விவசாய அணி மாவட்ட பொதுச் செயலாளர் விஜய் சேகர், பட்டியலணி மாவட்ட பொதுச் செயலாளர் ராமர், ஆலங்குளம் தெற்கு ஒன்றிய தலைவர் பண்டரிநாதன், மேலே நீலிதநல்லூர் ஒன்றிய தலைவர் குமார், மத்திய அரசுநலத்திட்ட பிரிவு மாவட்ட துணைத் தலைவர் சந்திரகுமார், நகர பொதுச்செயலாளர்கள் செந்தில்குமார், லிங்கம், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகசாமி, ரஜினி ராஜ், வேலுச்சாமி, திருமுருகன்,வர்த்தக பிரிவு மாவட்ட செயலாளர் , கல்வியாளர் பிரிவு மாவட்ட செயலாளர் சேதுராம பாண்டியன்,செங்கோட்டை ஒன்றிய தலைவர் மாரியப்பன்,ஊடகப்பிரிவு மாவட்ட துணைத் தலைவர் பேஷன் குமார், சுரண்டை நகர ஊடகப்பிரிவுதலைவர் சுடலை, சமூக ஊடகப்பிரிவு நகரத் தலைவர் முருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# இந்திய செஞ்சிலுவை சங்கம் (ரெட் கிராஸ் சொசைட்டி) காரைக்கால் கிளையின் சார்பாக பாதுகாப்பான தீபாவளி விழிப்புணர்வு



காரைக்கால் , அக்.22 -

இந்திய செஞ்சிலுவை சங்கம் (ரெட் கிராஸ் சொசைட்டி) காரைக்கால் கிளையின் சார்பாக பாதுகாப்பான தீபாவளி விழிப்புணர்வு நிகழ்ச்சி வடக்கு கோவில் பத்து காரைக்கால் பகுதியில் நடைபெற்றது, நிகழ்ச்சிக்கு இந்திய செஞ்சிலுவை சங்க வைஸ் சேர்மேன் சோழசிங்கராயர் தலைமை தாங்கினார்.

அன்னை தெரசா செவிலியர் கல்லூரி முதல்வர் ஜெயபாரதி முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக லஷ்மணபதி கலந்து கொண்டார். விழிப்புணர் நிகழ்ச்சியில் வடக்கு கோவில் பத்து பகுதியில் வசித்து வரும் ஜிப்ஸி மக்களும் அவர்களின் குழந்தைகளும் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பாதுகாப்பான முறையில் தீபாவளியை எப்படி கொண்டாடுவது என்று அகல்விளக்குகள் ஏற்றினர் அவர்களுக்கு இனிப்புகள் மற்றும் பொருட்கள் வழங்கி... ரெட்கிராஸ்சொசைட்டி புதுச்சேரி கிளையின் சார்பில் விழிப்புணர்வு செய்யப்பட்டது.

நிகழ்ச்சியில் செஞ்சிலுவைசங்கநிர்வாக கமிட்டி பொறுப்பாளர் செந்தில்குமார் ஆலோசனைகமிட்டி உறுப்பினர் ராசப்பா, லாரன்ஸ் ராயர் பொறுப்பாளர்கள் டாக்டர் மோகன் ராஜன் டாக்டர் மணிகண்டன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மதர்தெரசா செவிலியர் கல்லூரி பேராசிரியர்களும் மாணவ மாணவிகளும் சிறப்பாக செய்து இருந்தனர்..

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ்
♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com




கடலூர் மாவட்டம் சிதம்பரம் உதவி ஆட்சியராக சுவேதாசுமன் ஐ.ஏ.எஸ் பதவி ஏற்று கொண்டார்.

## நேரு யுவகேந்திரா சார்பில் காரைக்கால் அறிஞர் அண்ணா கலை கல்லூரியில் கலை நிகழ்ச்சிகளுடன் கூடிய விழிப்புணர்வு நிகழ்வு



காரைக்கால் , அக்.22 -

நேரு யுவகேந்திரா சார்பில் காரைக்கால் அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கலை நிகழ்ச்சிகளுடன் கூடிய விழிப்புணர்வு நிகழ்வு போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) ஆதர்ஷ். கல்லூரி முதல்வர் வியாசராயர், செய்தி மற்றும் விளம்பரத்துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) குலசேகரன், நேரு யுவக்கேந்திரா. ஒருங்கிணைப்பாளர் மணிமாறன், நுகர்வோர் விழிப்புணர்வு தலைவர் பாரிஸ் ரவி மற்றும் ஏராளமான மாணவ மாணவிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த கல்லூரி மாணவர்கள் கலை நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள். இதில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் சந்திர பிரியங்கா இங்கு நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக இருந்ததாக கூறினார். மேலும் அமைச்சரவையில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது என்றும் கூறினார். மேலும் போட்டிகளில் ஜெயிப்பதும் தோற்பதும் முக்கியமல்ல அனைத்து போட்டியிலும் கலந்து கொள்வது தான் முக்கியத்துவம் என்றும் அமைச்சர் கூறினார். மாணவர்கள் தங்களுக்கு கிடைக்கின்ற வாய்ப்புகளை தவறாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மாணவர்களை பார்த்து அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மேலும் கலை நிகழ்ச்சி, பேச்சுப்போட்டி. ஓவியப்போட்டி. கட்டுரை போட்டி, போன்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு போக்குவரத்து துறை அமைச்சர் பரிசுகளை வழங்கி பாராட்டினார்கள். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நேரு யுவகேந்திரா கணக்காளர் தவமணி மற்றும் சமூக ஆர்வலர் ராஜபாண்டியன் அவர்களும் செய்திருந்தார்கள்.

சீர்காழி அருகே பயிர் காப்பீட்டு தொகை வழங்க கோரி

# தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் கையில் திருவோடு ஏந்தி நூதன ஆர்ப்பாட்டம்



சீர்காழி, அக்.22 -

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி புதிய பஸ் நிலையம் எதிரில் கடந்தாண்டு தொடர் மழையால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் காப்பீட்டு தொகை வழங்க கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் கையில் திருவோடு ஏந்தி நூதன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாய சங்கம் சீர்காழி ஒன்றிய செயலாளர் வரதராஜன் தலைமை தாங்கினார்.

கொள்ளிடம் ஒன்றிய செயலாளர் கஜேந்திரன், சீர்காழி ஒன்றிய தலைவர் சி. கலியமூர்த்தி, கொள்ளிடம் ஒன்றிய தலைவர் கே கலியமூர்த்தி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். விவசாய சங்க மாவட்ட செயலாளர் வீரராஜ் வரவேற்று பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர் சிவராமன், ஏ ஐ டி யூ சி மாவட்ட செயலாளர் ராமன் ஆகியோர் கடந்த 2021-2022 பயிர் காப்பீடு செய்து பாதிக்கப்பட்ட அனைத்து வகைகளுக்கும் உரிய பயிர் காப்பீட்டுத் தொகையை மத்திய, மாநில அரசுகள் வழங்க வேண்டும். இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் நீதி சோழன், கொள்ளிடம் ஒன்றிய கழக செயலாளர் ஜெய சக்திவேல், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பிரபாகரன், பேரூராட்சி மன்ற உறுப்பினர் வித்யா தேவி, கட்சி நிர்வாகிகள் பாஸ்கரன், ஜெயக்குமார் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்.

இந்திய கடற்படை துப்பாக்கிச்சூட்டில்

## காயமடைந்த மீனவருக்கு ரூ.2 லட்சம் நிவாரணம் முதல்வர் உத்தரவு



சென்னை , அக்.22 -

இந்தியக் கடற்படையினரால் சுடப்பட்ட மீனவர் வீரவேலுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ.2 லட்சம் வழங்கவும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாகதமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தியில், "மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி கிராமத்தைச் சேர்ந்த காசிராஜன் என்பவரது மகன் மீனவர் வீரவேல், நேற்று காலை இந்திய கடற்படையினரால் சுடப்பட்டதில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளது என்ற செய்தியை அறிந்து, மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும்அடைந்தேன்.

சம்பவத்தில் காயைமடைந்த வீரவேல், சிகிச்சைக்காகஉடனடியாக ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் தற்போது அனுமதிக்கப் பட்டுள்ளார். சிகிச்சை பெற்று வரும் மீனவர் வீரவேலுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்க உத்தரவிட்டுள்ளதோடு, அவருக்குமுதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் இரண்டு லட்சமும் வழங்க உத்தரவிட்டுள்ளேன்" என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## மதுராந்தகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு மேளதாளங்களுடன் மலர் தூவி சிறப்பான வரவேற்பு



செங்கல்பட்டு , அக்.22 -

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் தேசிய நெடுஞ்சாலை அதிமுக சார்பில் சென்னையில் இருந்து சேலம் செல்லும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே பழனிசாமிக்கு செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட அதிமுக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ் .ஆறுமுகம், மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் தலைமையில் 500க்கும் மேற்பட்ட அதிமுக நிர்வாகிகள் எடப்பாடி பழனிசாமிக்கு மேலதாலங்களுடன் பூங்கொத்து கொடுத்து சால்வை அணிவித்து மலர் தூவி சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

கொடிக்கம்பத்தில் அமைக்கப்பட்டிருந்த எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதா திருவுருவ படத்துக்கு எடப்பாடியார் மலர் தூவி மரியாதை செய்தார் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் மகளிர் அணி நிர்வாகிகள் அதிமுக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# மதுரவாயலில் மது மற்றும் போதை பொருள்கள் பயன்படுத்துவதற்கு எதிராக விழிப்புணர்வு பிரச்சார பேரணி



சென்னை , அக்.22 -

இளைஞர்கள் அதிக அளவில் மது மற்றும் போதைபழக்கத்திற்கு அடிமையாகி வரும் நிலையில் போதை பொருள்களின் விற்பனையை தடுக்க காவல்துறையின் தீவிரமாக நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

மேலும்தமிழகம்முழுவதும் போதை பொருள்கள் பயன்படுத்துவதற்கு எதிராக விழிப்புணர்வு பிரச்சாரங்களும், பேரணிகளும் நடை பெற்று வருகின்றன இதன் ஒருபகுதியாக மதுரவாயல் ஆலபாக்கத்தில் அரசு அதிகாரிகள், காவல்துறையினர் ,மற்றும் கல்லூரிமாணவ, மாணவிகள் இணைந்து நடத்திய மது மற்றும் போதைபொருள் பயன்படுத்துவதற்கு எதிராக விழிப்புணர்வுபிரச்சார பேரணி நடைபெற்றது.

சுமார் ஐந்து கிலோமீட்டர் தூரம் வரை நடைபெற்ற பேரணியை மத்திய சென்னை கோட்டம் வருவாய் கோட்டாட்சியர். பிரவீனாகுமாரி கொடியசைத்து துவக்கிவைத்தார். இந்த பேரணியில் மதுரவாயல் வட்டாட்சியர். மோகன்குமார், வருவாய் ஆய்வாளர் அண்ணாமலை, கிராம நிர்வாக அலுவலர் ஜனார்த்தனன் மற்றும் மதுரவாயல் நிலைய சார் ஆய்வாளர் தலைமையில் காவலர்கள் , மதுவிலக்கு ஆயத்துறையினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புதுக்கோட்டையில் புறக்காவல் நிலையம் திறப்பு

**புதுக்கோட்டை, அக்.22 -**

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புதுக்கோட்டையில் புற காவல் நிலையத்தை புதுக்கோட்டை எஸ் பி வந்திதா பாண்டே திறந்து வைத்தார்.

புதுக்கோட்டை நகர உட்கோட்ட நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 24 ஆம் தேதி தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி கீழராஜா வீதியில் உள்ள அண்ணா சிலை அருகில் நேற்று புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே புறக்காவல் நிலையத்தை திறந்து வைத்தார்.

அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறா வண்ணம் கீழ ராஜவீதி, மேல ராஜவீதி, தெற்கு ராஜவீதி, வடக்கு ராஜவீதி ஆகிய நான்கு வீதிகள் மற்றும் திலகர் திடல், சங்கரமடம் ரோடு ஆகிய இடங்களில் ஒரு துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையில், மூன்று காவல் ஆய்வாளர்களும், 8 காவல் உதவி ஆய்வாளர்களும், 60 காவலர்களும், 50 ஊர்க்காவல் படையினரும், குற்றப்பிரிவு காவலர்களும், பாதுகாப்பு அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முக்கிய இடங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது பொதுமக்களுக்கு போக்குவரத்து இடையூறு ஏற்படா வண்ணம் போக்குவரத்து வசதிகளும் மாற்றியமைக்கப் பட்டுள்ளதாக மாவட்ட காவல்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்



தரங்கம்பாடி, அக்.22:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா பொறையார் தவசு முத்து நாடார் மேல்நிலைப்பள்ளியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

சட்டநாதபுரம் முதல் நாகப்பட்டினம் வரை நான்கு வழி சாலை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள வெல்ஸ்பன் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வு பிரிவு சார்பில் பொறையார் தவசு முத்து நாடார் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு சாலை பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான தீபாவளி பண்டிகை கொண்டாடும் வகையில் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இதில் பள்ளி தலைமை ஆசிரியர் சிவக்குமார் தலைமை வகித்தார், வெல்ஸ்பன் எஸ்.என்.ஆர்.பி பாதுகாப்பு துறை மேலாளர் கோபிராஜ், மற்றும் சமூகப் பொறுப்புணர்வு அலுவலர்கள் ஜூலியஸ் தூய மணி, வேலு, சுப்ரியோ, ஆசிரியர் பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஆரணியில் குறுவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிக்கும் நிகழ்ச்சி



ஊத்துக்கோட்டை, அக்22-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி பஸ் நிறுத்தம் அருகே அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்று இயங்கி வருகிறது. இப்பள்ளியில் கும்மிடிப்பூண்டி குறுவட்டத்தைச் சேர்ந்த ஆரணி கும்மிடிப்பூண்டி கவரப்பேட்டை ஏலாவூர் சுண்ணாம்புகுளம் உள்ளிட்ட 14 பள்ளிகளில் பயின்று வரும் உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு இடையேயான ஜூனியர், சீனியர், சூப்பர் சீனியர் பிரிவுகளுக்கான கபடி, கோகோ, வாலிபால், ஹாக்கி, டென்னிஸ், ரிங் பால், த்ரோ பால் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளும் 100 மீட்டர்,200 மீட்டர்,400 மீட்டர்,600 மீட்டர் ஓட்டப்பந்தயங்களும், தொடர் ஓட்டப்பந்தயங்களும் நடைபெற்றது.

இதில், வெற்றி பெற்ற மற்றும் கலந்து கொண்ட மேற்கொண்ட பள்ளிகளைச் சேர்ந்த 500 மாணவ-மாணவிகளுக்கு சான்றிதழ்களும், நினைவு பரிசு வழங்கும் நிகழ்ச்சி ஆரணி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, பள்ளியின் தலைமை ஆசிரியர் முருகன் தலைமை தாங்கினார். ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி. முத்து, ஆரணி பேரூராட்சி மன்ற தலைவர் ராஜேஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நினைவு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கி சிறப்புரை ஆற்றினர்.

இந்நிகழ்ச்சியில், ஆரணி பேரூராட்சி நியமனக்குழு உறுப்பினர் டி.கண்ணதாசன், அதிமுக பேரூராட்சி மன்ற உறுப்பினர் சந்தானலட்சுமி குணபூபதி மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். மேலும், இப்பள்ளியின் முன்னாள் மாணவர் ரவிச்சந்திரபாபு இப்பள்ளியின் தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளம் ஆகியவற்றிற்கு குடிநீர் மேல்நிலைத் தொட்டியை அமைத்து தந்தார். அதனை அவர் மாணவர்களின் பயன்பாட்டுக்கு அர்ப்பணித்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளில், முன்னதாக அனைவரையும் உடற்கல்வி ஆசிரியர்கள் மாதவராஜ், தியாகு, ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்றனர். முடிவில், உதவி தலைமை ஆசிரியர் செந்தில் மோகன் அனைவருக்கும் நன்றி கூறினார்.








இந்தோ-பசிபிக், அயல்நாட்டு காமன்வெல்த் மேம்பாட்டு இயக்குநர் ஜெனரல் விஜய் ரங்கராஜன் மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹீ, ஆகியோர் நேற்று முன்தினம் சென்னை கிண்டி, அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையால் செயல்படும் காலநிலை ஸ்டுடியோவில், தமிழ்நாட்டின் காலநிலை மாற்றத்தின் செயல்பாடுகளை குறித்து இளம் விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடினார். இந்தோ-பசிபிக், அயல்நாட்டு காமன்வெல்த் மேம்பாட்டு அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அன்னவாசலில் போலீசாரின் விழிப்புணர்வு பிரச்சாரம் – பொதுமக்கள் மத்தியில் வரவேற்பு



அன்னவாசல்,அக்.22-

அன்னவாசல் போலீசாரின் விழிப்புணர்வு பிரச்சாரம் பொதுமக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது.

அன்னவாசல் போலீசார் தீபாவளிபண்டிகையையொட்டி விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றனர். இந்த துண்டு பிரசுரங்களை அன்னவாசல் பகுதிகளில் இன்ஸ்பெக்டர் சந்திரசேகரன் சப்-இன்ஸ்பெக்டர் உத்திராபதி உள்ளிட்ட போலீசார் வழங்கினர், மேலும் அன்னவாசல் பகுதி முழுவதும் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்து வருகின்றனர், இந்த விழிப்புணர்வு பிரச்சாரம் பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.



மதுரை மாவட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மதுரை மருத்துவக் கல்லூரி கூடுதல் மாணவியர் விடுதி 1, மதுரை மருத்துவக் கல்லூரி கூடுதல் மாணவியர் விடுதி 2, மதுரை மருத்துவக் கல்லூரி முதுநிலை மருத்துவ கூடுதல் மாணவர் விடுதி, மதுரை மருத்துவக் கல்லூரி கூடுதல் மாணவர் விடுதி, மதுரை மருத்துவக் கல்லூரி புதிய நூலக கட்டிடங்களை சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் அமைச்சர் மூர்த்தி, மாவட்ட கலெக்டர் அனீஸ் சேகர், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், நாடாளுமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மாநகராட்சி ஆணையாளர் சிம்ரன் ஜீத் சிங் காலோன், சட்டமன்ற உறுப்பினர்கள் தளபதி, வெங்கடேசன், பூமிநாதன், துணை மேயர் நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.










## திருமயத்தில் தீபாவளியை முன்னிட்டு
# ஆயத்த பயிற்சி மைய குழந்தைகளுக்கு புத்தாடை வழங்கும் நிகழ்வு



திருமயம், அக்.22-

திருமயம் வட்டார வள மையத்தில் உள்ள பள்ளி ஆயத்த பயிற்சி மைய குழந்தைகளுக்கு (மாற்றுத்திறன்) புத்தாடை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

திருமயம் வட்டார வள மையத்தில் உள்ள பள்ளி ஆயத்த மையத்தில் பயின்றுவரும் 16 குழந்தைகளுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சிங்கப்பூரில் வசித்து வரும் வளர்மதி மெய்யழகன் குடும்பத்தின் சார்பாக புத்தாடை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. வட்டார கல்வி அலுவலர்கள் மகேஸ்வரன் மற்றும் ஜேம்ஸ் ஆரோக்கியசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர், வட்டார வள மைய மேற்பார்வையாளர் குல்ஜார் பானு முன்னிலை வகித்தார், 16 மாணவர்களுக்கு ரூபாய் 15 ஆயிரம் மதிப்பிலான புத்தாடை வழங்கப்பட்டது.

நிகழ்வின் போது ஆசிரியர் பயிற்றுநர்கள் அன்பழகன், பிரகதாம்பாள், அருணா, பரிசுத்தம் ஆசிரியர்கள் சுப்பிரமணியமணியன், வைகை சிறப்பாசிரியர்கள் ஜூலி, பேபி, குளோரி, இயன்முறை மருத்துவர் செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர், முதலில் வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர் விஜயசாந்தி வரவேற்றார், முடிவில் பள்ளி ஆயத்த பயிற்சி மைய ஆசிரியர் கலா நன்றி கூறினார்.



புதுக்கோட்டை கிரவுண்ட் சிட்டி ரோட்டரி சங்கத்தின் சார்பில் நேற்று மாதாந்திர கூட்டம் மற்றும் தீபாவளி கொண்டாட்டம் தலைவர் செந்தில் கணேசன் தலைமையில் நடைபெற்றது. துணை ஆளுநர் முருகராஜ், செயலாளர் தங்கதுரை, பொருளாளர் செந்தில் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த கூட்டத்தில் சுபபாரதி கல்லூரி ரோட்டராக்ட் சங்கத்தின் மாணவிகள் கொடைக்கானலில் நடைபெற்ற ரோட்டரி ரைலாவில் கலந்து கொண்டு மிஸ் ரைலா பட்டத்தை வென்ற விண்மிகா மற்றும் ஜெயலட்சுமி, ஆர்த்தி, சுவாதி ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது இதில் சங்கத்தின் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு அவர்களை வாழ்த்தினர்.













Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை வட்டம், குல்லூர்சந்தையில் இலங்கை தமிழர்களுக்கான வீடுகள் கட்டும் பணியினை, மாவட்ட கலெக்டர் ஜெ.மேகநாதரெட்டி, நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# புதுக்கோட்டை ஜெ.ஜெ கல்லூரியில் ரெட் கிராஸ் சங்கத்தின் தொண்டு ஆர்வலர்களுக்கான ஒரு நாள் நெறிகாட்டல் பயிற்சி




புதுக்கோட்டை, அக்.22–

புதுக்கோட்டை மாவட்ட ரெட் கிராஸ் சங்கத்தின் தொண்டு ஆர்வளர்களுக்கான ஒரு நாள் நெறிகாட்டல் பயிற்சி ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.

இந்தியன் ரெட் கிராஸ் (த.நா) பிரிவின் நிதி நல்கையுடன் நடைபெற்ற இப்பயிற்சி முகாமை, பாரதிதாசன் பல்கலைக்கழக இளையோர் செஞ்சிலுவைச் சங்க மண்டல ஒருங்கிணைப்பாளர் மு.வெற்றிவேல் தொடங்கி வைத்து உரையாற்றினார். அவர்தம் உரையில் தொண்டாற்றும் பண்பு இயல்பாக இருப்பினும் அதனை ஒரு அமைப்பாக நெறிமுறையுடன் செய்யப்படும் பொழுது, நிறைவான பயன் கிடைக்கும்.

அதனால், மாணவர்கள் யூத் ரெட் கிராஸ் அமைப்பின் நெறிமுறைகளோடு தொண்டாற்றும் பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும், பெருந்தொற்றின் பேரிடர் காலங்களில் இளையோர் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணி அளவிட முடியாதது. பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குட்பட்ட கல்லூரிகள் வழங்கிய இரத்த தானம் இரத்த வங்கிகளின் இருப்பளவு குறையாமல் காத்து வருகிறது என்று கூறினார். தொடர்ந்து செஞ்சிலுவைச் சங்கத்தின் வழிமுறைகள், இரத்த தானம் செய்வதன் அவசியம், முதலுதவி, ஆரோக்கிய வாழ்வுக்கு அத்தியாவசிய வழிகள் ஆகிய விழிப்புணர்வுகளையும், பயிற்சிகளையும் முறையே ராஜா முகமது, பேராசிரியர் விஸ்வநாதன், சுரேஸ்குமார், முத்துக்குமார் ஆகியோர் வழங்கினர்.

பிற்பகல் நிறைவு விழாவில், புதுக்கோட்டை மாவட்ட நேரு யுவ கேந்திராவின் மாவட்ட இளைஞர் அலுவலர் மு.ஜோயல் பிரபாகர் கலந்து கொண்டு நிறைவுரை ஆற்றினார். பயிற்சிக்கு, கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் கவிதா சுப்பிரமணியன் தலைமை தாங்க, புதுக்கோட்டை மாவட்ட இளையோர் செஞ்சிலுவைச் சங்கத்தின் மாவட்ட அமைப்பாளர் தயாநிதி வரவேற்புரை கூறினார். நிறைவாக, ஜேசு கலை அறிவியல் கல்லூரியின் திட்ட அலுவலர் கோவிந்தராஜன் நன்றியுரை கூறினார், இப்பயிற்சி முகாமில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 14 கல்லூரிகளில் இருந்து 97 மாணவ,மாணவிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

# மருத்துவ சுற்றுலா தலமாக இந்தியா விரைவில் மாறும் சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தகவல்

மும்பை, அக். 22

இந்தியா விரையில் மருத்துவசுற்றுலா தலமாக மாறும் என்று, இந்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மான்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

இந்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா மகாராஷ்டிர மாநிலம் அகமது நகரில் நடந்த நிகழ்ச்சியில் பல சுகாதார உட்கட்டமைப்பு திட்டங்களை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் டாக்டர் மன்சுக் மாண்டவியா பேசியதாவது:

"நாம்உடல்நலம்மற்றும் சிகிச்சையில் கவனம் செலுத்த வேண்டும். பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் நாடு விரைவாக முன்னேறி வருகிறது. ஆரோக்கியமான குடிமகன் மட்டுமே தேசிய வளர்ச்சிக்கு பங்களிக்க முடியும் என்பதால், சுகாதாரத்தை, வளர்ச்சியுடன் இணைத்து பார்க்கிறது இந்திய அரசு. முதலில் நம் மக்கள் நோய்வாய்ப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அதனால்தான் இந்திய அரசு சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்களில் அதிக கவனம் செலுத்துகிறது.

அரசு மருத்துவ வசதிகளை உருவாக்குவது மட்டுமின்றி மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையையும், எம்பிபிஎஸ் படிப்புக்கான இடங்களின் எண்ணிக்கையையும் அதிகரித்து வருகிறது. "நம் இளைஞர்கள் மருத்துவக் கல்லூரிகளில் பட்டம் பெறுவதற்குள், நம் நாடு மருத்துவ சுற்றுலா மையமாக மாறி, உலகம் முழுவதும் உள்ள நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் இடமாக மாறும் என்றார்.

இந்திய அரசின் ஆராய்ச்சிக் கொள்கை குறித்து டாக்டர் மன்சுக் மாண்டவியா மேலும் கூறுகையில், " உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு 10 விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்களில் 3 பேர் இந்தியர்கள். அரசின் ஆராய்ச்சிக் கொள்கையானது புதுமையான ஆராய்ச்சித் திட்டங்களைத் தொடர விரும்பும் திறமையான இளைஞர்களை ஊக்குவிக்கிறது. இந்தியா புதுமை மற்றும் ஆராய்ச்சியில் முன்னணியில் இருக்கவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.



தூத்துக்குடி மாவட்டம், உதயமாகி 36 வது ஆண்டை முன்னிட்டு மாவட்ட கலெக்டர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மரக்கன்றுகளை நட்டார். அருகில் வட்டாட்சியர் செல்வக்குமார் உள்ளார்.

## உளுந்தூர்பேட்டை அருகே

# பாதூர் கிராமத்தில் விவசாயி–ன் மகள் நீட் தேர்வில் தேர்ச்சி

கள்ளக்குறிச்சி, அக்,22_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட, பாதூர் கிராமத்தில் வசிக்கும் முருகன் விவசாய கூலி வேலை செய்து வருகிறார். இவருடைய மகள் முத்துலட்சுமி இதே கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு படித்து வெற்றி பெற்ற நிலையில், இந்த வருடம் நடைபெற்ற, நீட் தேர்வில் 308 மதிப்பெண்கள் பெற்று தமிழக அளவில் 216–வது இடத்தைப் பிடித்துள்ளார்.



மருத்துவ படிப்பு கலந்தாய்வில் மாணவி முத்துலட்சுமிக்கு விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரியில் மருத்துவம் படிப்பதற்கான இடம் கிடைத்து உள்ளது. மேலும் விவசாய கூலி தொழிலாளி மகள் அரசு பள்ளியில் படித்து முதல் முயற்சியிலேயே நீட் தேர்வில் வெற்றி பெற்று அரசு மருத்துவக் கல்லூரியிலேயே மருத்துவம் படிப்பதற்கான இடம் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



ராமநாதபுரம் மாவட்டம் போகளூர் ஊராட்சி ஒன்றியம் சத்திரக்குடி கிராமத்தில் மாவட்ட கலெக்டர் ஜானி டாம் வர்கீஸ், இந்திய அரசு நீர் சக்தி அமைச்சகத்தின் சார்பில் நீர் தாங்கிகள் மற்றும் நிலத்தடி நீர் மேலாண்மை திட்டம் மூன்றாம் நிலை பயிற்சியைக் குத்துவிளக்கேற்றி தொடக்கி வைத்து உரையாற்றினார்.



பாலமேடு அருகே உள்ள சாத்தியார் அணையில் தொடர் மழை காரணமாக அணை முழுவதும் நிரம்பி மறுகால் பாய்வதை காணலாம்.



விருதுநகர் மாவட்டம் காரியப்பட்டி ஊராட்சி ஒன்றியம், கல்லுப்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்வுத் துறையின் சார்பில் வைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# புதுக்கோட்டையில் தூய்மை பாரதம் விபத்தில்லா தீபாவளி மற்றும் மாணவர்களுக்கான ஓவியப்போட்டி ஆகிய முப்பெரும் விழா



**புதுக்கோட்டை, அக்.22–**

இந்திய அரசு புதுக்கோட்டை மாவட்ட நேரு யுவகேந்திரா மாவட்ட குழந்தைகள் நலக்குழு ஆகிய அமைப்புகளின் சார்பில் புதுக்கோட்டை புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளியில் தூய்மை பாரதம், உடல் உழைப்பு தானம் விபத்தில்லா தீபாவளி குறித்த விழிப்புணர்வு மற்றும் மாணவர்களுக்கான ஓவியப் போட்டிகள் ஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நேரு யுவகேந்திரா மாவட்ட இளைஞர் அலுவலர் ஜோயல் பிரபாகர் தலைமை தாங்கினார்.

தூய மரியன்னை மேல்நிலைப்பள்ளி தாளாளர் இருதயராஜ் குழந்தைகள் நலக்குழு உறுப்பினர்கள் ஜென்ம ராகினி கிருத்திகா சாமிநாதன் மற்றும் நளினி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நேரு யுவ கேந்திரா திட்ட உதவி அலுவலர் நமச்சிவாயம் விழா நோக்க உரையாற்றினார்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக மாணவர்கள் பள்ளி வளாக தூய்மை பணியில் ஈடுபட்டனர். மேலும் தூய்மை பாரதம் விபத்தில்லா தீபாவளி மற்றும் மாசுபாடு இல்லா தீபாவளி ஆகிய தலைப்புகளில் மாணவர்களுக்கு ஓவியப்போட்டி நடத்தப்பட்டது. ஓவியப் போட்டியில் ஆரோக்கிய பெனட்டிக் ஹாசன் முதல் பரிசும் கைலாசநாதர் இரண்டாம் பரிசும் ரெமின் மூன்றாம் பரிசும் பெற்றனர். விழாவில் சுமார் 1000 மாணவர்கள் பங்கேற்றனர்.

மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் எஸ். மணிவண்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார். விபத்து மற்றும் மாசுபாடு இல்லாத வகையில் தீபாவளியை பாதுகாப்பாக கொண்டாடி மகிழ்ந்திட மாணவர்களை கேட்டுக்கொண்டார். விழாவில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் முனைவர் அனிதா மற்றும் எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி ராஜ்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்ட குழந்தைகள் நலக்குழு தலைவர் சதாசிவம் புதுக்கோட்டை பல்நோக்கு சமூக சேவை நிறுவனத்தின் குழந்தைகள் நல திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜோதிராஜ் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் வீரமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

முன்னதாக விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சோமசுந்தரம் வரவேற்றார். நிறைவாக நேரு யுவ கேந்திராவின் தேசிய இளையோர் தொண்டர் வாசு அனைவருக்கும் நன்றி கூறினார் விழா ஏற்பாடுகளை நேரு யுவ கேந்திராவின் தேசிய இளையோர் தொண்டர் கருப்பையா மற்றும் ராஜேஷ் கண்ணன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.



கடலூர் மாவட்டம் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழியல் துறை பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவு விழாவில் துணைவேந்தர் கதிரேசன், பதிவாளர் சீத்தாராமன், ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் அரங்க பாரி சிறப்பு விருந்தினராக இயக்குனர் மருத்துவர் நலப்பணி ஜெய. இராஜமுர்த்தி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

# விதிமீறல்களுக்கான அபராதங்களை உயர்த்தி அரசாணை ஹெல்மெட் அணியாவிட்டால் ரூ.1,000

**சென்னை , அக்.22–**

போக்குவரத்து விதிமீறல்களுக்கான அபராதங்களை உயர்த்தி தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதன்படி, ஹெல்மெட் அணியாமல் சென்றால் ரூ.1,000, பைக் ரேஸில் ஈடுபட்டால் ரூ.5 ஆயிரம் அபராதம் வசூலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், போதையில் கார் மற்றும் இருசக்கர வாகனம் ஓட்டுபவர்களுடன் பயணம் செய்வோருக்கும் அபராதம் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உள்துறைச் செயலர் கே.பணீந்திர ரெட்டி வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளதாவது:

சாலை விபத்துகள் மற்றும் போக்குவரத்து விதிமீறல்களைக் குறைக்கும் வகையில் அபராதத்தை அதிகரிக்கலாம் என்று மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.

இதையொட்டி, திருத்தப்பட்ட மோட்டார் வாகனச் சட்டத்தின் (2019) சில அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு, அபராதத்தை அதிகரிப்பது தொடர்பான பரிந்துரையை போக்குவரத்துத் துறை ஆணையர்,தமிழக அரசுக்கு அனுப்பி உள்ளார். மின்னணு முறையில், அந்தந்த இடத்திலேயே அபராதம் வசூலிக்கும் வசதியும் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதை கவனமாகப் பரிசிலித்த தமிழக அரசு, போக்குவரத்து ஆணையரின் பரிந்துரையை ஏற்று, அபராதத்தை உயர்த்தி, அரசாணை பிறப்பித்துள்ளது.

அதன்படி, தீயணைப்பு, ஆம்புலன்ஸ் வாகனங்களுக்கு வழிவிட மறுத்தால் ரூ.10,000, இருசக்கர வாகனத்தில் ஹெல்மெட் அணியாமல் சென்றாலோ அல்லது காரில் சீட்பெல்ட் அணியாமல் சென்றாலோ ரூ.1,000, பைக் ரேஸில் ஈடுபட்டால் முதல் முறை ரூ.5,000, அடுத்த ஒவ்வொரு முறையும் ரூ.10,000 அபராதம் வசூலிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.



இதேபோல, 46 சட்டப் பிரிவுகளின் கீழ், விதிகளை மீறுவோருக்கான அபராதம் உயர்த்தப்படுகிறது. இவ்வாறு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை மாநகர காவல் ஆணையர் சங்கர் ஜிவால் கூறும்போது, "சாலை விதிகளை மீறுவோருக்கான அபராதத் தொகை உயர்த்தப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அபராதம் விதிக்கும் மின்னணுக் கருவிகளில், அது தொடர்பான மாற்றங்களை செய்ய வேண்டி உள்ளது.

எனவே, வரும் 28–ம் தேதி முதல் புதிய அபராதத் தொகை வசூலிக்கப்படும். மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுபவர்களுக்கு ஏற்கெனவே ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

இனி, மதுபோதையில் வாகனம் (கார் மற்றும் இருசக்கர வாகனம்) ஓட்டுவது தெரிந்தும், வாகனம் ஓட்டுபவருக்கு துணைபோகும் வகையில், அவருடன் பயணிப்பவர்களுக்கும் ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும். அதாவது, மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து செல்வோர் மற்றும் காரில் ஓட்டுநருடன் செல்வோருக்கு அபராதம் விதிக்கப்பட உள்ளது.


மது போதையில் வாகனம் ஓட்டி உயிர் இழப்பை ஏற்படுத்தினால், கொலை வழக்குக்கு நிகரானப் பிரிவின் கீழ் வழக்குபதிவு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விதிமீறல்கள் தொடர்பாக போக்குவரத்து போலீஸார் அபராதம் வசூலிக்காமல் லஞ்சம் பெற்றால், சம்பந்தப்பட்ட போலீஸார் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். விதி மீறல்களில் ஈடுபடும் போக்குவரத்து போலீஸார் குறித்து புகார் தெரிவித்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.



# தூத்துக்குடி துப்பாக்கி சூடு நான்கு போலீசார் பணியிடை நீக்கம்

# வடகிழக்கு, காஷ்மீர் பகுதிகளில் பாதுகாப்பு நிலைமை மேம்பட்டுள்ளது





# பிளாஸ்மாவுக்கு பதில் நரம்பு வழியே ஜூஸ் நோயாளி பரிதாப பலி


| | | | | |
|---|---|---|---|---|
| சென்னை / புதுக்கோட்டை | 22.10.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**அஷ்பகுல்லா கான்** , இந்திய விடுதலைப் போராளி (பி.1900) (இ.1927)



**டபிள்யூ. தகநாயக்க** , இலங்கைப் முன்னாள் பிரதமர், அரசியல்வாதி (பி.1902) (இ.1997)



**அ. துரையரசன்** , தமிழக அரசியல்வாதி (பி.1922) (இ.1988)



**திருவாளப்புத்தூர் டி. ஏ. கலியமூர்த்தி** , தமிழகத் தவில் கலைஞர் (பி.1948) (இ.2020)



## இன்றைய நினைவு நாள்

**அ. மாதவையா** , தமிழக புதின எழுத்தாளர், பத்திரிகையாசிரியர் (பி.1872) (இ.1925)



**கவாஜா நசிமுத்தீன்** , பாக்கிஸ்தானின் 2வது பிரதமர் (பி.1894) (இ.1964)



**சொ. கருப்பசாமி** , தமிழக அரசியல்வாதி, முன்னாள் அமைச்சர் (பி.1955) (இ.2011)

